செ.வெ.எண்: 04 நாள்: 03.11.2020

**விழுப்புரம் மாவட்டம் காணை மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ''ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ்'' நடைபெற்று வரும் குடிநீர் குழாய்கள் பொருத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் காணை மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் குழாய் பொருத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு இன்று (03.11.2020) ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் சூரப்பட்டு, அரும்புலி மற்றும் கோழிப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியம் அடுக்கம் ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் எனவும், இந்த திட்டத்தில் பயன்படுத்தப்படும் குடிநீர் குழாய்கள் தரம் சரியாக உள்ளதா என்பதனை உறுதி செய்து பொருத்தப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

அனைத்து ஊராட்சிகளுக்கும் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகளை சுத்தம் செய்து தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யவேண்டும். சாலைகளில் மழைநீர் தேங்காத வண்ணம் அனைத்து கிராமங்களிலும் சாலை மேம்பாட்டு பணிகள் சிறப்பாக இருக்க வேண்டும். மேலும் அனைத்து கிராம பகுதிகளிலும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.முத்தமிழ்ச்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.**